1997 மார்ச் 20] [திரு. பி. ஆர் சுந்தரம்]

நகைகள் எல்லாம் இருந்தது என்று கூறுகின்றார்கள். ஆகவே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இருக்கின்ற பாதுகாப்பு அவற்றிற்குக் கிடையாது. மொத்தத்தில் தமிழ்நாடு முழுவதுமே எந்த வங்கிகளுக்கும் பாதுகாப்பு இல்லை. ஆகவே, நாட்டுடமையாக்கப்பட்ட தேசிய வங்கிகளுக்குக் கொடுப்பதுபோல பாதுகாப்பு வசதிகளையும் இந்த அரசு அந்த வங்கிகளுக்குக் கொடுக்குமேயானால், இதுபோன்ற திருட்டுகளைத் தடுக்க முடியும் என்று தெரிவித்துக் கொண்டு இத்துடன் அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. மணி.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே தொடக்க வேளாண்மை வங்கியில் 42 இலட்ச ரூபாய் களவாடப்பட்டது சம்பந்தமாக, அந்த வங்கி எந்த அளவுக்குப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது? அப்படிப் பாதுகாப்பாக வைப்பதில் ஏற்பட்ட ஏதாவது கோளாறுகளின் காரணமாக இந்த 42 இலட்ச ரூபாய்க்கான நகைகள் திருடப்பட்டுள்ளதா? அல்லது அந்த வங்கியை அதனுடைய நிர்வாகிகள் சரிவரப் பராமரிக்காததன் விளைவாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதா? அந்த விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பைச் சரி செய்ய அரசால் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மல்லூரில் உள்ள ஆரம்ப விவசாயக் கூட்டுறவு வங்கியில் 1-3-1997 அன்று இரவு வங்கியின் இரும்புப் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 12,000 கிராம் எடையுள்ள தங்க நகைகளும், ரூபாய் 20,895/- ரொக்கமும் களவுபோய்விட்டதாக வங்கியின் தலைவர் துரைசாமி காவல் நிலையத்தில் 2-3-1997 அன்று புகார் செய்தார். அதன்பேரில், மல்லூர் காவல் நிலையக் குற்றப்பதிவு எண் 171/97-ல் இந்தியத் தண்டனைச் சட்டம் 457 மற்றும் 380 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வேலூர் சரக காவல்துறை துணைத் தலைவர் மற்றும் காவல்துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை மேற்கொண்டார்கள். விரல்ரேகை நிபுணர்கள், தடய அறிவியல் நிபுணர்கள் மற்றும் மோப்பநாய்கள் உதவியோடு சம்பவ இடத்தை ஆய்வு செய்ததில் இக்குற்றத்தில் மூன்றுக்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டிருக்கக்

கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது. குற்றவாளிகள் அலுவலக அறைக்குச் செல்லும் பக்கவாட்டுக் கதவின் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து, பின்னர் பெட்டக அறைக்குச் சென்று, அங்கேயிருந்த கோத்ரெஜ் பாதுகாப்புப் பெட்டகத்தின் வலதுமேல் பகுதியில் கேஸ் டார்ச்சைப் பயன்படுத்தி துளைப் போட்டிருக்கின்றார்கள். களவு போன அனைத்து நகைகளும், ரொக்கப் பணமும் இந்தத் துளையின் மூலம்தான் களவாடப்பட்டுள்ளன. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகில் இருந்த கிணற்றிலேயிருந்து இக்குற்றத்தைப் புரிய பயன்படுத்தப்பட்ட ஆக்ஸிஜன் மற்றும் எல்.பி.ஜி. சிலிண்டர் ஆகியவை கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. விசாரணையின் போது, வங்கியில் களவுபோன மொத்த நகைகளின் அளவு சரிபார்க்கப்பட்டு, 807 சவரன் நகைகளும், அதனுடைய மதிப்பு ரூ.24,55,560 மற்றும் ரொக்கம் ரூ. 20,895- ஆக மொத்த மதிப்பு 24,76,455 ரூபாய் களவு போய் உள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் 4.2 லட்சம் என்று சொன்னார்கள். சேலம் ஊரக காவல் துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் ஐந்து சிறப்புக் காவல் குழுக்கள் அமைக்கப்பட்டு, இவ்வழக்கில் புலன் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

முற்பகல் 10-40

மேற்படி தனிக் குழுக்கள் தமிழ் நாட்டிலே உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று, செய்முறைக் குற்றவாளிகளின் செயல்களைத் தணிக்கை செய்து, சந்தேக நபர்களை விசாரித்து வருகின்றார்கள். சம்பவ இடத்தில் கிடைக்கப்பெற்ற ஆக்ஸிஜன் மற்றும் எல்.பி.ஜி. சிலிண்டர்கள் தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் அருகே களவாடப்பட்டவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டம், அதியமான்கோட்டை காவல் நிலையக் குற்ற எண் 783/94 வழக்கில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் சிவலிங்கம், மாது, சீனிவாசன் மற்றும் புருஷோத்தமன் ஆகியோர் இவ்வழக்கில் சம்பந்தப்பட்டு உள்ளார்களா என விசாரிக்கப்பட்டது. சென்னை, செங்கல்பட்டு, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, தேனி, மதுரை, தர்மபுரி, கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்கும் தனிக் குழுக்கள் விரைந்து சென்று இம்மாதிரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி வழக்குகளில் ஏற்கனவே சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் சந்தேகிக்கப்பட்டவர்களான 54 குற்றவாளிகளுக்கு இவ்வழக்குகளில் சம்பந்தம் உள்ளதா என்பது பற்றி தீவிரமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உள்ளூர் குற்றவாளிகளும் சந்தேக நபர்களும் தீர விசாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1997 மார்ச் 20] [கலைஞர் மு. கருணாநிதி]

சேலம், இராஜாஜி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் உள்ள வெல்டிங் பட்டறைகள் மற்றும் வெல்டிங் சம்பந்தப்பட்ட அனைத்து தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கு இவ்வழக்கில் தொடர்பு இருக்கக் கூடிய சாத்தியக்கூறுகளும் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டத்திலும் மற்றும் இதர மாவட்டங்களிலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் நடந்த வழக்குகளின் குற்றவாளிகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு இதர மாவட்டத்தில் செயல்படும் சிறப்புப் புலன் ஆய்வுக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு விவரங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து பல்வேறு இடங்களுக்கும் குழுக்கள் அனுப்பப்பட்டு, இவ்வழக்கில் சம்பந்தப்பட்டு இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றிய நபர்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்களைக் கண்டுபிடித்து அவர்களிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே, தீவிரமாக இதிலே விசாரணை நடைபெற்று வருகின்ற காரணத்தால் விரைவில் இந்தக் கொள்ளையர்கள் பிடிபடுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

4. கவன ஈர்ப்பு

திருப்பூர் நகராட்சிக்குக் கூடுதலாகச் சுகாதாரப் பணியாளர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதால் திருப்பூர் நகரில் சுகாதாரக் கேடு அதிகரித்துள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. சுப்பராயன் அவர்கள் விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருப்பூர் நகராட்சிக்குக் கூடுதலாக சுகாதாரப் பணியாளர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதால் திருப்பூர் நகரில் சுகாதாரக் கேடு அதிகரித்துள்ளது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS